ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நிதியியல் உளவறிதல் பிரிவு
திகதி 2023 ஒத்தோபர் 17

**2023 ஏப்பிறல் 01 தொடக்கம் 2023 செத்தெம்பர் 26 வரை நிதியியல் நிறுவனங்கள் மீது இணங்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் நிருவாக ரீதியான தண்டப் பணங்களை விதித்தல்/சேகரித்தல்**

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்களின் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற் கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2023 ஏப்பிறல் 01 தொடக்கம் 2023 செத்தெம்பர் 26 வரையான காலப்பகுதியில் கீழேகாட்டப்பட்டவாறு, மொத்தமாக ரூ.1.7 மில்லியன் கொண்ட தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட நிதி திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டதைக் கடைப்பிடிப்பதற்குத் தவறியமைக்காக நிருவாகரீதியாக தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டிருந்தன.

**1. மேர்சன்ட் பாங்க் ஒப் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி**

**விதிப்புத் திகதி:** 2023 யூலை 12

**தொகை:** ரூ. 300,000.00 (ரூபா மூன்று இலட்சம்)

**கொடுப்பனவுத் திகதி:** 2023 ஓகத்து 10

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) விஞ்சுகின்ற அடகு ஏலக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடாமையின் மூலம் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

**2. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி**

**விதிப்புத் திகதி:** 2023 யூலை 12

**தொகை:** ரூ. 200,000.00 (ரூபா இரண்டு இலட்சம்)

**கொடுப்பனவுத் திகதி:** 2023 ஓகத்து 14

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) தங்கக்கடன் வசதிகளை வழங்குவது தொடர்பில் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடாமையின் மூலம் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

**3. எல்பீ பினான்ஸ் பிஎல்சி**

**விதிப்புத் திகதி:** 2023 ஓகத்து 09

**தொகை:** ரூ. 700,000.00 (ரூபா ஏழு இலட்சம்)

**கொடுப்பனவுத் திகதி:** 2023 செத்தெம்பர் 12

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

மொத்தக் கொடுக்கல்வாங்கல்களாக (பல தனிப்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் மொத்தத்தை உள்ளடக்கி) அல்லது தனியொரு கொடுக்கல்வாங்கலாக நடாத்தப்பட்ட ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) விஞ்சுகின்ற அடகு ஏலக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடாமையின் மூலம் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவைக் கடைப்பிடிப்பதற்குக் கம்பனி தவறியிருந்தது.

**4. பீபள்ஸ் லீசிங்க் அன்ட் பினான்ஸ் பிஎல்சி**

**விதிப்புத்திகதி:** 2023 ஓகத்து 18

**தொகை:** ரூ. 500,000.00 (ரூபா ஐந்து இலட்சம்)

**கொடுப்பனவுத் திகதி:** 2023 செத்தெம்பர் 14

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) விஞ்சுகின்ற நிலையான வைப்பை ஆரம்பிப்பது தொடர்பில் இலத்திரனியல் நிதி மாற்றலை அறிக்கையிடாமையின் மூலம் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவைக் கடைப்பிடிப்பதற்குக் கம்பனி தவறியிருந்தது.